**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.116/2023 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | | த–பெ | |
| ஊர்: | : | | சமயம்: | |
| வயது: | : | | வட்டம்: | |
| தொழில்: | : | | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.09.2024

எதிரி ஆஜர்.

---

23.09.2024

குறுக்கு விசாரணை

இவ்வழக்கை தவிர வேறு வரவு செலவு எதிரியுடன் உள்ளதா என்றால் இல்லை. எந்த தேதியில் எதிரி என்னிடம் கடன் கேட்டார் என்றால் அடிக்கடி கேட்டார் தேதி நினைவில்லை. இந்த வழக்கிற்கு எத்தனை முறை, எந்தெந்த மாதங்களில் கடன்கேட்டார் என்றால் இரண்டு மூன்று முறை 2021 ல் 8 வது மாதத்தில் கேட்டார் . அதற்கு முன்பு எதிரி கடன் கேட்டாரா என்றால் அதற்கு முன்னரும் எதிரி கடன் கேட்டு கொடுத்திருக்கிறேன். அது எந்தெந்த மாதங்களில் கேட்டார் என்றால் 2021 ல் 7 வது மாதம் கேட்டார். 7 வது மாதத்தில் எத்தனை முறை கேட்டார் என்றால் ஆரம்பத்தில் 2,3 முறை கேட்டார். முதல் முறை கடன் கொடுத்து வட்டி எதுவும் செலுத்தாதபோது நான் இரண்டாவது முறை கடன் கொடுத்தேனா என்றால் சரியல்ல. எதிரி வட்டியை சரியாக செலுத்தி வந்தார். இவ்வழக்கு கடனிற்கு முன்பு எந்தெந்த மாதங்களில், எவ்வளவு தொகை வட்டியாக கொடுத்திருக்கிறாரா என்றால் 7 வது மாதத்தில் கடன் பெற்றபோது அம்மாதத்திற்கான வட்டியை கொடுத்தார். அதன்பின்னர் 2,3 மாதங்கள் வட்டி கொடுத்தார். இதுவரை ரூ.15 ஆயிரம் வட்டி கொடுத்துள்ளார். இந்த வட்டி கொடுத்த விவரத்தை புகார், சட்டஅறிவிப்பு, நிரூபணவாக்குமூலத்தில் நான் சொல்லவில்லையென்றால் சரிதான். இவ்வழக்கு தொகையை 09.09.2021 ல் ரூ.இரண்டரை லட்சமும், 20.09.2021 ல் ரூ.இரண்டரை லட்சமும், கொடுத்திருக்கிறேன். மேற்படி விவரத்தை எனது புகார், சட்டஅறிவிப்பு, நிரூபணவாக்குமூலத்தில் நான் சொல்லவில்லையென்றால் சொல்லியிருக்கிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் இருதவணைகள் தலா ரூ.இரண்டரை லட்சம்

கொடுத்தாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். கடன் கேட்டபோது ரூ.5 லட்சம் கேட்டார். முதலில் கையில்இருந்த ரூ.இரண்டரை லட்சத்தை கொடுத்தேன். பின்னர் வங்கியிலிருந்த ரூ.இரண்டரை லட்சத்தை எடுத்து 20.09.2021 ல் கொடுத்தபோது மொத்த தொகை ரூ.5 லட்சத்திற்கு கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்தார். முதல் தவணை வாங்கும்போது எந்த ஆவணமும் வாங்கவில்லையென்றால் சரிதான். எந்த நம்பிக்கையில் ஆவணமின்றி கொடுத்தேன் என்றால் 7 வது மாதத்தில் கொடுத்த கடனிற்கு முறையாக வட்டி செலுத்தி வந்ததாலும் இவ்வழக்கு கடன் கேட்டபோதே மொத்தமாக ரூ.5 லட்சம் கேட்டதாலும், பகுதி தொகை கொடுத்தபோது ஆவணங்கள் எதுவும் வாங்கவில்லை. 20.09.2021 ல் எதிரியே கடனுறுதிச்சீட்டு எடுத்துவந்து எழுதிக்கொடுத்தார். இரண்டாவது தவணை தொகையை வங்கியிலிருந்து எடுத்து கொடுத்ததற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். ம.சா.,ஆ.1 கடனுறுதிச்சீட்டு எந்த காரணத்திற்கு கடன் பெற்றதாக கண்டுள்ளது என்றால் பொன்நகரில் இடம் வாங்குவதற்கும், குடும்ப தேவைக்கும் கேட்டார். எதிரி பொன்நகரில் இடம் வாங்கியதற்கான ஆவணம் எதையும் நான் பார்க்கவில்லை. பொன்நகர் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பொன்நகரில் 1 செண்ட் நிலம் சுமார் ரூ.5 லட்சம் இருக்கும். என்ன குடும்ப செலவு என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. குடும்ப செலவு போக பாக்கித்தொகையை 1 செண்ட் நிலம் பொன் நகரில் வாங்கமுடியாது என்றால் சரிதான். மொத்த தொகையையும் என்னிடம் கடன்பெற்று எதிரி பொன் நகரில் இடம் வாங்கவில்லை. பற்றாக்குறைக்காகத்தான் கடன் கேட்டார். ம.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் எவ்வளவு நாட்களுக்குள் கடனை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 1 வருடத்தில் திருப்பி தருவதாக சொன்னார். வழக்கிற்காக நான் பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடனுறுதிச்சீட்டின் செல்லுபடி காலம் தெரியுமா என்றால் 1 வருடம் என நினைக்கிறேன். கடனுறுதிச்சீட்டு செல்லுபடி மூன்று ஆண்டுகள் என்றாலும், மேற்படி மூன்று ஆண்டு காலம் முடிவடைவதற்குள் நான் நிபந்தனையை மீறிவிட்டேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும்புகார் மனு நான் தாக்கல் செய்தது என்றால் சரிதான். மேற்படி புகார்மனுவில் எதிரி இவ்வழக்கு காசோலை தொகையை பெற்றுக்கொண்டு அதற்கான வட்டியையோ, அசலையோ இதுவரை செலுத்தவில்லையென்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். எதிரியிடம் இவ்வழக்கு தொகையை எந்தெந்த தேதிகளில் கேட்டேன் என்றால் தேதி நினைவில்லை. பல்கலைகழகத்தில் சென்று கேட்டிருக்கிறேன். எதிரி வீட்டிற்கு வந்தபோது கேட்டிருக்கிறேன். இந்த புரோநோட்டை பூர்த்தி செய்தவர் யார் என்றால் சேகர். அந்த புரோநோட்டில் சாட்சி கையொப்பம் செய்தவர்கள் பெயர் முகவரி தெரியுமா என்றால் முகவரி நினைவில்லை, பெயர் தெரியும். மேற்படி சாட்சிகளை கடன் கொடுத்த தேதியன்று என் வீட்டிற்கு

யார் வரவழைத்தார்கள் என்றால் எனது கணவரை பார்க்க வந்திருந்தனர். மேற்படி சாட்சிகளை எதிரி அழைத்து வரவில்லையென்றால் சரிதான். சேகர் என்பவரை எதிரிக்கு தெரியும். சேகர் என்பவரை எதிரிக்கு தெரியாது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புரோநோட்டில் கையொப்பம் செய்தவர்கள் யாரும் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த சாட்சிகளை யாரையும் நேரடியாக தெரியுமா என்றால் சேகர் என்பவரை தெரியும், எனது கணவருக்கு இரண்டு சாட்சிகளையும் தெரியும். எனது கணவர் எப்போது இறந்தார் என்றால் 11.05.2022 . எதிரிக்கும், என் கணவருக்கும் இவ்வழக்கு கடனிற்கு முன்பாக வரவு செலவு இருந்த விவரம் தெரியுமா என்றால் 2021, 7 வது மாதத்தில் கொடுத்திருக்கிறோம் பின்னர் இவ்வழக்கு கடனை கொடுத்திருக்கிறோம். வேறு வரவு செலவு எதுவும் இல்லை. கொடுத்திருக்கிறோம் என்று குறிப்பிடுவதால் என்னை தவிர வேறு ஒரு நபரும் கடன் கொடுத்தாரா என்றால் எனது கணவர் உயிரோடு இருந்த போது கடன் கொடுத்ததால் அவ்வாறு சொல்லியிருக்கிறேன். ம.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் எனது கணவரும், எதிரியின் மனைவியும் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லையென்றால் சரிதான். கடனுறுதிச்சீட்டை தவிர வேறு எந்த ஆவணங்களும் கடன் கொடுத்த தேதிகளில் வாங்கவில்லையென்றால் சரிதான். எதிரியின் மனைவி என்ன தொழில் செய்து வந்தார் என்றால் முதலில் மைக்ரோ பைனான்ஸ் வைத்திருந்தார் தற்போது பள்ளத்தூரில் கல்லூரியில் வேலை பார்க்கிறார். கடன் பெற்ற காலகட்டத்தில் எதிரி எந்த முகவரியில் வசித்து வந்தார் என்றால் பொன்நகரில் வசித்து வந்தார். பின்னர் இடம்மாறி சென்றுவிட்டார். எதிரியின் பொன்நகர் முகவரி தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கு காசோலையை யார் பூர்த்தி செய்தார் என்றால் எதிரியே பூர்த்தி செய்தார். எதிரி வழக்கு காசோலையை பூர்த்தி செய்யவில்லையென்றாலும், மேற்படி காசோலையை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெற்றால் உண்மை தெரியவரும் என்றால் எதிரி பூர்த்தி செய்த காசோலையை கொடுத்ததால் எதிரியே எழுதியிருப்பார் என்று அவ்வாறு கூறினேன். என்னிடம் கொடுத்தபோதே வழக்கு காசோலை முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். இந்த காசோலை என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் **Signature Differs** என்று திருப்பப்பட்டுள்ளது. எதிரி காசோயை பூர்த்தி செய்யவும் இல்லை, அதிலுள்ள கையொப்பமும் எதிரி செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி ஏமாற்றும் நோக்கத்தில் காசோலையில் கையொப்பத்தை மாற்றி செய்து கொடுத்துள்ளார். கையொப்பம் மாற்றி செய்தததற்காக எதிரி மீது காவல்நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன். என் கணவர் என்ன தொழில் செய்து வந்தார் என்றால் பில்டிங் காண்ட்ராக்டர் தொழில் செய்து வந்தார். நான் திருப்பத்தூர் தாலுகா எஸ்விகே மேல்நிலைப்பள்ளி, தெக்கூரில் ஆசிரியையாக பணிபுரிகிறேன். நான் அரசு ஊதியம் பெறும் ஊழியர் என்றால் சரிதான். எதிரி மீது தாக்கல்

செய்திருக்கும் இரண்டு வழக்குகளிலும் எதிரிக்கு வட்டிக்கு கடன் கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அரசு விதிப்படி குறிப்பிட்ட தொகைக்கு மேல் ஒரு அரசு ஊழியர் வட்டிக்கு கடன் கொடுக்கக்கூடாது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரியே ஒருவட்டி தருவதாக சொன்னார். எதிரி தெரிந்தவர் என்பதால் தான் கடன் கொடுத்தேன். நான் வட்டி தொழில் எதுவும் செய்யவில்லை. எனது புகார் மனுவில் கடன் தொகைக்கு ஆண்டு ஒன்றிற்கு 12% வட்டி தருவதாக ஒப்புக்கொண்டு என்ற வாசகம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரியாகவே வட்டி தருவதாக சொன்னதால் அவ்வாறு எழுதப்பட்டுள்ளது. எதிரிக்கு தொகையை கொடுப்பதற்கு முன் மேல் அதிகாரிகளிடம் ஒப்புதல் பெற்றேனா என்றால் இல்லை. எதிரி அரசு ஊழியர் என்றால் சரிதான். அரசு ஊழியர் குறிப்பிட்ட தொகைக்கு மேல் கடன் வாங்க வேண்டுமென்றால் மேல் அதிகாரியிடம் அனுமதி பெற்றிருக்க வேண்டுமென்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அரசு விதிகளின்படி இது சட்ட விரோதமானது என்றால் சரியல்ல. கடனுறுதிச்சீட்டை வைத்து ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லையென்றால் எதிரியே எனது வீட்டிற்கு வந்து வட்டியை செலுத்த முடியவில்லையென்றும், தனக்கு கடன்சுமை அதிகமாகவிட்டதாகவும், அசலை மட்டும் தருவதாக கூறி இவ்வழக்கு காசோலையை கொடுத்தார். எதிரியுடன் எத்தனை ஆண்டுகால பழக்கம் என்றால், எனக்கு 7,8 வருடங்களாக தெரியும், எனது கணவருக்கு 10 வருடங்களாக தெரியும். இவ்வழக்கு கடனுறுதிச்சீட்டில் கையொப்பம் செய்த சாட்சிகள் மற்றொரு வழக்கிலும் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளனர் என்றால் சரிதான். இந்த இரண்டு வழக்கிலும் சேர்த்து நான்கு தவணைகளாக பணம் கொடுத்துள்ளேனா என்றால் சரிதான். முதல் தவணை மற்றும் மூன்றாவது தவணையில் பணம் கொடுக்கும்போது எந்த ஆவணமும் வாங்கவில்லையென்றால் சரிதான். ஒரே சாட்சிகள் எவ்வாறு இவ்வழக்கின் கடனுறுதிச்சீட்டு எழுதும்போது சாட்சிகளாக வந்தனர் என்றால் அவர்கள் எனது கணவருக்கு நன்கு பழக்கம் இதனால் வீட்டிற்கு அடிக்கடி வருவார்கள். முதலில் சாட்சிகளை முகவரி தெரியாது என்று சொல்விட்டு தற்போது நன்கு பழக்கமானவர்கள் என்று முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சிகளை தெரியும் அவர்களது முகவரித்தான் தெரியாது கூறியிருந்தேன். முதல் மற்றும் மூன்றாவது தவணைகளில் கடன் கொடுத்தபோது சாட்சிகள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். இந்த சாட்சிகள் அனைவரும் உங்களது கட்டிடத்தில் வேலை செய்பவர்களா என்றால் இல்லை. அவர்கள் இடம் வாங்கி விற்பனை செய்பவர்கள். மற்றொரு வழக்கு கடனுறுதிச்சீட்டை யார் பூர்த்தி செய்தது என்றால் கிருஷ்ணகுமார் என்பவர் பூர்த்தி செய்தார். ஏன் ஒரே கடனுறுதிச்சீட்டாக எழுதிவாங்கவில்லையென்றால் எதிரி முதலில் ரூ.5 லட்சம் கேட்டார் பின்னர் அது போதவில்லையென்று 9-வது மாதத்தில் மீண்டும் பணம் கேட்டார். எதற்காக ஒரே வாங்கிடிவல்லையென்றால் எதிரிக்கு சம்பளம்வ ரும்போது அரியர்

பணம் வரும் என்று எதிரியாகவே 3ம் தேதி மற்றும் 7ம் தேதிகளில் காசோலைகளை வசூலுக்கு செய்யச் சொல்லி இரண்டு காசோலைகளை கொடுத்தார். ரூ.10லட்சம் கொடுத்ததற்கு எவ்வித ஆவணத்தையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு 90% கண் தெரியாத விவரம் எனக்கு தெரியுமா என்றால் எதிரிக்கு லேசாக கண் தெரியாது. எதிரி தானாகவே வந்து செல்வார். எதிரியால் தனியாக நடந்து செல்லமுடியுமே தவிர அவரால் ஆவணங்களில் உள்ள எழுத்துக்களை படிக்க இயலாது என்றால் அதுபற்றி தெரியாது எதிரிக்கு 90% கண் தெரியாது என்ற விவரம் எனக்கு தெரியாது. எதிரி அதற்கான ஆவணங்களை தாக்கல் தயாராக இருக்கிறார் என்றால் சரிதான். இரண்டு முகவரிகளுக்கு அறிவிப்பு அனுப்பியிருக்கிறேன் என்றால் சரிதான். எதிரி வீட்டை காலி செய்ததால் பல்கலைகக்கழக முகவரிக்கு அனுப்பினேன். எதிரி எந்த காலத்திலும் பொன் நகரில் ஒரே முகவரியில் வசித்து வருகிறார் என்றாலும் அம்முகவரி தெரியாத காரணத்தினால் நான் பல்கலைக்கழக முகவரிக்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல. எதிரியின் இரண்டு முகவரிகளுக்கு அனுப்பபட்ட அறிவிப்பும், பல்கலைகழகத்தில் தான் சார்பு செய்யப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. ம.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் சொல்லாத விவரத்தை பொய்யாக கூறி இவ்வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு எதற்காக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் எதிரி எனது திருப்பி கொடுக்காததால் தாக்கல் செய்துள்ளேன். எதிரி கொடுத்த காசோலைகளிலும், அவரது கையொப்பம் மாறுபட்டிருந்தது. எனது புகார் மனு, அறிவிப்பு மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் கடனுறுதிச்சீட்டில் உள்ள சங்கதிகளை எதிரிக்கு படித்து காண்பித்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. படித்து காண்பித்தபிறகுதான் எதிரி கையொப்பம்செய்திருப்பார். இரண்டு காசோலைகளையும் எதிரியே பூர்த்தி செய்து கையொப்பம் செய்து கொண்டு வந்து கொடுத்தார். எதிரியை இருசக்கரவாகனத்தில் அழைத்துவரும் நபரையும் நான் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லையென்றால் சரிதான். எதிரியால் காசோலையையும், கடனுறுதிச்சீட்டையும் படித்து பார்க்க இயலாது என்றால் எதிரியுடன் வந்தவர் எதிரிக்கு அனைத்தையும் சொல்லுவார் நாங்களும் எதிரியிடம் கேட்டதில்லை. எதிரிக்கு 90% கண் தெரியாது என்ற விவரம் தெரிந்துதான் எதிரி எனது கணவரிடம் கொடுத்த காசோலைகளை தவறாக பயன்படுத்தி நான் இவ்வழக்குகளை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எதிரிக்கும் அறிமுகம் இல்லை என்றாலும் எதிரி எனது கணவருடன் வைத்திருந்த வரவுசெலவுவிற்காக கொடுத்திருந்த காசோலையை வைத்து இவ்வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல . எதிரிக்கும் எனது கணவருககும் இடையே இருந்த வரவு செலவு முடிந்து காசோலைகளை திருப்பி தருவதாக சொல்லியிருந்த சமயத்தில் எனது கணவர் இறந்து விட்டார் என்றால் சரியல்ல. எதிரியை இருசக்கரவாக னத்தில் அழைத்து வரும் நபர் பெயர் எனக்கு தெரியாது. எதிரியை அழைத்து வரும் நபர் பெயர்

பழனியப்பன் என்றும், அவர் எதிரியின் காசோலைகளை திருடிச் சென்றாக வழக்குகள் உள்ளது என்றாலும், மேற்படி பழனியப்பனிடமிருந்து காசோலையை பெற்று இவ்வழக்கு தாக்கல் செய்திருக்கலாம் என்றால் சரியல்ல. நான் வருமானவரி செலுத்துகிறேன். எதிரிக்கு கொடுத்த கடன் தொகையை வருமானவரிகணக்கில் காண்பித்திருக்கிறேனா என்றால் நான் பைனான்ஸ் தொழில் எதுவும் செய்யவில்லை. அந்தந்த ஆண்டிற்குரிய வரவு செலவுகளை தாக்கல் செய்வதுதான் வருமானவரி கணக்கு என்றால் சரிதான். எதிரிக்குகொடுத்த கடனைவருமானவரி கணக்கில்காண்பிக்காததால் எதிரிக்கு நான் கடன் கொடுக்கவில்லையென்றால் சரியல்ல. தெரிந்த நபர்களுக்கு கடன் கொடுப்பதை வருமான வரிகணக்கில் காண்பிப்பதில்லை. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்றால் சரியல்ல.

**சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's)

**விரைவு நீதிபதி காரைக்குடி**